RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22336

OPEN ACCESS

# தூப்புக்காரி நாவலில் துப்புரவாளர்களின் வாழ்வியல்

பா.அன்னலட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி சாத்தூர்- 626203, தமிழ்நாடு, இந்தியா.

# Biographies of Cleaners in the Thoopukari Novel

B. Annalakshmi [a, *]

[a] Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur- 626203, Tamil Nadu, India.

* Corresponding Author: tamilzagianu@gmail.com

Received: 13-03-2022
Revised: 05-07-2022
Accepted: 12-07-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

Located to tell the biographies of the cleaners. Caste Difference the class differences within the castes can be seen in this period of computerization. There are those who do this work without proper pay and without professional equipment. Cleaners clean the dirty area and make it look dirty to the eyes of others. The denial of a woman's love for being the daughter of a scavenger is a painful one. The story revolves around the life of the people living in Kanyakumari district. Thuppukari's novel focuses on the lives of marginalized sweepers. Poverty alone stands by those who have lost their physical health and their vitality till the end. Cleaners Poverty, class struggle, sentiments are all taken up in this article.

**Keywords:** Thuppukari, Cleaner, Biographies, Caste

## முன்னுரை

ஆரம்பகால மனிதன் கூட்டு வாழ்க்கை வாழ்ந்தபோது கிடைத்ததை வைத்து பகிர்ந்து வாழ்ந்தான். ஏற்றத்தாழ்வு இல்லாமல் அனைவரையும் சரிசமமாக பார்த்தவன் இன்று மதம், சாதி, இனம், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுடன் வாழ்ந்து வருகிறான். சாதிகளுக்குள் ஏழை பணக்காரன் என்ற உயர்வு தாழ்வு உள்ளது. மனிதனை மனிதனாகப் பார்க்கும் சமூகம் மாறும் வரை இந்த வர்க்க போராட்டம் நடந்து கொண்டேதான் இருக்கும். துப்புரவாளர்களின் வாழ்வியலையும், உணர்வுகளையும் சித்தரிப்பதாக அமைந்துள்ளது இக்கட்டுரை.

கன்னியாகுமாரி மாவட்டம், வெள்ளிக்கோடு அருகே கிழக்கு விளையைச் சேர்ந்தவர் மலர்வதி. இவரது இயர்பெயர் மேரி ஃப்ளோரா. ‘காத்திருந்த கருப்பாயி’ என்பது இவரின் முதல் நாவல். இரண்டாம் நாவல் தூப்புக்காரி. தூப்புக்காரி நாவலுக்கே சாகித்திய அகாடமியின் இளம் எழுத்தாளர் விருது பெற்றார். 2017 இல் காட்டுக்குட்டி என்ற கட்டுரைத் தொகுதியும், 2019 இல் கருப்பட்டி என்ற சிறுகதை தொகுதியும் வெளியிட்டுள்ளார். அந்த பகுதியில் வெளிவரும் ‘முதல் சங்கு’ என்ற மாத இதழுக்கும், ‘இலக்கிய சிறகு’ என்ற நாளிதழுக்கும் பொறுப்பாசிரியராக உள்ளார். தூப்புக்காரி என்பது துப்புரவு வேலை செய்யும் பெண் என்று பொருள். தூப்புக்காரி என்பது இவர்களது வட்டார வழக்கு.

## தூப்புக்காரி நாவல் சுருக்கம்

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்து அங்கு வாழும் மக்களின் வாழ்வியலைச் சொல்லுவதாக இக்கதை நகர்கிறது. நாடார் சாதியைச் சேர்ந்த கனகம் கணவன் இறந்த பின்

வறுமையின் காரணமாக மருத்துவமனையில் துப்புரவு வேலை செய்கிறாள். தன்மகள் பூவரசியை நாடார் சாதியிலே நல்ல குடும்பத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பது கனகத்தின் ஆசை. ஆனால் வரதட்சணை கொடுக்க இயலாததால் பூவரசியை விரும்பி கேட்ட சக்கிளியர் சாதியைச் சேர்ந்த மாரிக்கு கொடுக்க நினைக்கிறாள். மாரி துப்புரவுத் தொழிலான சாக்கடை அள்ளுபவன். கனகம் முதலில் தயங்கினாலும் பின் சரி என்று எண்ணுகிறாள். பூவரசிக்கு அந்த மருத்துவமனையில் கார் டிரைவரான மனோ மீது காதல். மனோவிற்கும் பூவரசியைப் பிடிக்கும். மனோ படித்த வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். ஒரு சூழலில் மனோவிடம் தன்னை இழக்கிறாள் பூவரசி. கனகத்திற்கு உடல் நிலை சரியில்லாத நேரத்தில் கனகத்தின் துப்புரவுத் தொழிலை பூவரசி செய்ய நேர்கிறது. உடல் நிலை சரியில்லாத கனகம் தன் மகளை நினைத்து இறந்து விடுகிறாள். எல்லாம் தெரிந்த மாரி பூவரசிக்கு ஆதரவாக நிற்கிறான். மனோ வீட்டில் பார்த்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். பூவரசி கற்பமடைகிறாள். மாரி ஆதரவு தந்து உன் குழந்தை என் குழந்தையாக வளரட்டும் என்று பெருந்தன்மையோடு கூறுகிறான். சில மாதங்களிலே மாரி சாக்கடை அள்ளி விட்டு சாலையில் உட்கார்ந்திருந்த போது லாரி மோதி இறந்து விடுகிறான். ஒன்றறை வருடம் கழித்து வெளிநாட்டில் இருந்து மனோ பூவரசியைப் பார்க்க ஊருக்கு வருகிறான். பூவரசியின் மனதில் மாரி நல்லவனாக இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்று தெரிந்த பின் அவளிடம் பேசாமலே திரும்பிச் செல்கிறான். குழந்தையில்லாத தம்பதியர்கள் பூவரசியின் மகளை கேட்கிறார்கள் முதலில் சரி என்று கூறியவள் பின் மறுத்து விடுகிறாள். தன் மகளை மாரி ஆசை பட்டது போல் படிக்க வைக்க வேண்டும் என்று வைராக்கியம் கொள்கிறாள்.

## சாதீய வேறுபாடு

பண்டையகால மனிதன் இனக்குழுக்களாக வாழ்ந்த போது இடத்திற்கு ஏற்றவாறு தொழிலை செய்தான். தொழிலின் அடிப்படையில் சாதிகள் பிரிக்கப்பட்டது. சாதிகளுக்கு இடையிலே வர்க்க சமூகம் உருவாகியது. உயர்வு, தாழ்வு என்றெல்லாம் மனிதனை பிரித்து பார்க்கும் சமூகமாக மாறியது. “தொழிலாளர்கள், முதலாளிகள் என இரண்டு வர்க்கங்களே சமூதாயத்தில் நிலவும் என்பார் காரல் மார்க்ஸ்” இந்த நூற்றாண்டில் சாதி வேறுபாடு பார்க்கா விட்டாலும் பணத்தை வைத்து தீர்மானித்து விடுகின்றன (Bhakthavatsala Bharathi, 2019). சாதிகள் அடிப்படையில் செய்த தொழில்கள் இன்று மாறியுள்ளது. அன்றாட வாழ்க்கைப் பயணத்திற்காக எந்த தொழிலாக இருந்தாலும் கௌரவம் பார்க்காமல் செய்கின்றனர். ஆனால் திருமணம் என்று வரும் பொழுது அவரவர் சாதியில் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். “சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் சண்டைகள் வருவதில்லை. ஆனால் சாதி என்ற கட்டமைப்பைத் திருமணத்தில் தவறாதுக் காட்டி விடுவார்கள்” ஏழையாக இருந்தாலும் சாதி பார்ப்பதில் கௌரவம் பார்க்கின்றார்கள் துப்புரவு வேலை செய்யும் கனகம் கூட தன்மகளை நாடார் சாதியிலே திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று என்னுவதை தூப்புக்காரி நாவலில் அறிய முடிகின்றது (Malarvathi, 2013). சமூகம் இப்படியான கட்டமைப்பிற்குள் உள்ளது. இனி சாதியற்ற சமூகம் உருவாகினால் கூட ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு மாறுவது கடினம்.

## தொழில்

நிலத்தின் தன்மைக்கு ஏற்ற தொழில்கள் செய்த மனிதர்கள் இன்று அனைத்துத் தொழில்களும் செய்கின்றனர். குலத்தொழில் என்பதே இன்று வெகுவாக மாறியுள்ளது. கௌரவமானத் தொழில் செய்யவே மனிதன் விரும்புகின்றான். செய்யும் வேலைக்கு ஏற்ப அவரவர் சமூகநிலைத் தீர்மானிக்கப்படுகிறது. அதையும் மீறி வயிற்றுப் பிழைப்பிற்காக எந்தத் தொழில் வேண்டுமானாலும் செய்யத் துணிகின்றனர். “இந்த இன மக்களுக்கு இதுதான் தொழில் என்று அதிகமாய் இந்த பகுதியில் இருக்காது. நாடாத்தியும் களைபிடுங்கப் போவாள். பறச்சியும் கட்டிட வேலைக்குப் போவாள். மருத்துவமனையை தூத்துத் தொடச்சிக் கல்யாண வீட்டு எச்சிலை எடுக்க நாடார்களும் போவார்கள்”

உழைப்பிற்கேற்ற உதியமில்லாமல் கிடைத்த வேலையை செய்து சமூதாயத்தில் நல்ல மரியாதையும் இல்லாமல் வாழ்க்கையை நகர்த்துகிறார்கள் (Malarvathi, 2013).

## துப்புரவுத் தொழில்

சுற்றுப்புறம் தூய்மை இல்லை என்றால் பல நோய் கிருமிகள் பரவும். இந்த பெருந்தொற்றுக் காலத்தில்தான் துப்புரவுத் தொழிலாளர்களின் தியாகம் தெரிந்தது. அசுத்தத்தோடு அசுத்தமாக வாழ்ந்து நாட்டைச் சுத்தம் செய்பவர்கள். கௌரவம் பார்க்காமல் இந்த வேலையைச் செய்கின்றனர். சூழல் காரணமாக இந்த வேலைக்கு வந்தாலும் சேவை எண்ணத்தோடு மலம், சிறுநீர், கழிவுநீர், திடக்கழிவுகள் போன்றவற்றைச் சுத்தம் செய்கின்றனர். "உணவு எச்சில்களும், பெண்கள் பயன்படுத்தும் மாதவிடாய்க் கழிவுகளும், மோலும், காறலுமாய் நிறைந்திருந்த கழிவுத் தொட்டியில் கைவைத்து வாரி அவற்றைத் தள்ளும் வண்டியில் கொட்டிக் கொண்டிருந்தாள் கனகம்" (தூப்புக்காரி பக்.29) கையால் மலம் அள்ளும் வழக்கம் வளர்ந்த பல நாடுகளில் இந்நிலை மாறியுள்ளது. இந்தியாவில் இந்த அவலம் என்று மாறுமோ அவனவன் கழிவை அவனவன் சுத்தம் செய்யத் தொடங்கினால் சிறிய மாற்றம் ஏற்படும்.

வீட்டுக் கழிவறையில் துர்நாற்றம் வந்தாலே மூக்கைப் பொத்திக் கொண்டு முகம் சுழிக்கிறவர்கள் மத்தியில் இத்துணை அசுத்ததிற்குள்ளும் துர்நாற்றத்தைப் பெரிது படுத்தாமல் வேலை செய்கின்றனர். துப்புரவுத் தொழிலில் அதிகம் ஈடுபடுபவர்கள் பெண்கள்தான். கையால் மலம் அள்ளும் வேலையைச் செய்வது கடுமையான காரியம். துப்புரவுத் தொழில் செய்பவர்கள் தன் பிள்ளைகள் இத் தொழிலில் ஈடுபடாமல் படித்து நல்ல வேலைக்குச் செல்ல வேண்டும் என்பதே இவர்களின் ஆசை. ஆனால் சூழல் பூவரசியையும் அதே வேலைக்குத் தள்ளுகிறது. "கழிவறைக்குண்டில் மிதந்த மலம் அவளைப் பயமுறுத்தியது. ஓடிவிட வேண்டும் போலத் தோன்றியது. அமுங்கி நின்ற கழிவறை நாற்றத்தை விட்டு விரித்த பகுதியில் ஓடி சுத்தமான காற்றைச் சுதந்திரமாக சுவாசிக்கத் தோன்றியது" இவ் வரியில் துப்புரவாளர்களின் நிலையை உணரமுடிகின்றது (Malarvathi, 2013). புதிதாகத் துப்புரவு வேலையில் ஈடுபடுபவர்களுக்கு இத்தொழில் பழக சில மாதங்களாவது ஆகும். வாந்தி, மயக்கம் போன்ற உடல்நலக் குறைவு ஏற்படும். எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு இவ் வேலையைச் செய்கின்றனர். காலப் போக்கில் துப்புரவுத் தொழில் பழகிப் போகின்றது.

கையால் மலம் அள்ளுபவர்களை விட பாதாளச் சாக்கடை அள்ளுபவர்களின் நிலை பரிதாபத்திற்கு உரியதுதான். சாக்கடை அள்ளும் பொழுது விச வாயுவால் மூச்சடக்கி இறந்தவர்கள் அதிகம். இவ்வேலையைச் செய்பவர்களைப் பார்த்தாலே தீண்ட தகாதவனைப் போல் பார்க்கின்றனர். சாக்கடையில் குளித்தது போல் உடல் முழுவதும் சாக்கடை. வாய்க்குள்ளும் நாசிக்குள்ளும் போகும் சாக்கடை. சாக்கடையைத் தின்று வாழ்வது போன்ற கொடுமையான வாழ்க்கை இவர்களுடையது. சாக்கடைத் துர்நாற்றம் தாங்க முடியாமல் மூக்கை மூடுபவர்கள் மத்தியில் வாழ்நாள் முழுவதும் சாக்கடை நாற்றத்துடன் வாழ்கின்றனர். உழைப்பிற்கு ஏற்ற ஊதியமில்லை, செய்யும் வேலையில் பாதுகாப்பில்லை, சுகாதாரம் இல்லை, சமூகத்தில் நல்ல மரியாதை இல்லை. இப்படியான துன்பத்தின் இடையே வாழ்கிறவர்கள் துப்புரவுத் தொழிலாளர்கள்.

## வறுமை

வறுமையைப் பாடுபொருளாகச் சங்க இலக்கியங்கள் முதல் இன்றைய இலக்கியங்கள் வரை எடுத்தியம்புகின்றது. உணவிற்கு பஞ்சம் வரும் பொழுதுதான் வறுமையின் கொடுமையை உணர்ந்து கொள்ள முடியும். வயிற்றுப்பசி ஒரு மனிதனை எந்த வேலை வேண்டுமானாலும் செய்யத் தூண்டும் என்பதை இன்று இந்த வாழ்கை உணர்த்துகின்றது. வறுமைக்கு இழிவானத் தொழில் கௌரவமானத் தொழில் என்று பிரித்துப் பார்க்க தெரியாது. வறுமையில் துப்புரவுத் தொழிலுக்கு வரும் பெண்களுக்கு வாழ்நாள் முழுவதும் வறுமை நிரந்தரமாகிறது. வறுமையால் வரும் இன்னல்களை வள்ளுவர் கூறுகிறார்.

"தொல்வரவும் தோலும் கொடுக்கும் தொகையாக

நல்குரவு என்னும் நசை"

வறுமை குடிப்பெருமையைக் கூட அழித்து விடும் என்று வள்ளுவரின் குறள் மூலம் உணர்ந்துகொள்ள முடிகின்றது (Parimelazhagar, 2015). ஆரோக்கியமான உணவு, கந்தளற்ற ஆடை, அடிப்படைத் தேவை இவை அனைத்தும் நிராசையாகவேப் போகின்றது. ஒரு சோடி செருப்பு வாங்க இயலாமல் கஷ்டப் படும் தூப்புக்காரியான கனகத்தின் நிலையை இன்நாவலில் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. பணத்திற்காக இழிவானத் தொழிகள் செய்பவர்களின் மத்தியில் துப்புரவுத் தொழில் பரவாயில்லை என்று செய்யும் கனகத்தைப் போன்று எத்தனையே பெண்கள் உள்ளனர். ஒருவன் வருமையில் இருக்கும் பொழுது இந்தச் சமூகத்தில் எவையெல்லாம் உயர்வாகக் காட்டப்படுகிறதோ அது மிகவும் சாதாரணமான ஒன்றாகப் பார்க்கப்பட்டுவிடுகிறது. பணக்காரனுக்குப் பணத்திற்கு மேல் பணம் கூடிக்கொண்டே போக ஏழைக்கோ உழைபிற்கு மேல் சுமையும் வறுமையும் பெருகி கொண்டே போகிறது.

## காதல்

வறுமையில் கொடிய நோய் பசி என்றால் காதலும் கொடிய நோயே. வறுமையில் வாடும் பெண்களுக்குக் காதல் வந்தாள் அது வாழ்நாள் சாபமாக மாறி விடுகிறது. தூப்புகாரியான பெண்ணிற்க்கு காதல் வந்தாள் சமூகம் கொடுக்கும் தண்டனைக் கொடிது. பெண் காதலித்து, பெற்றவர்கள் சம்மதிக்க வில்லை என்றால் போராடலாம் ஆனால் காதலிதவனே வேண்டாம் என்று விலகினால் என்ன செய்ய முடியும். பூவரசியின் நிலையும் அதுவே. ஆணிற்கு ஆசை வந்தால் காதல். பெண்ணிற்கு ஆசை வந்தால் அது காமமாகப் பார்க்கும் சமூகம். ஒருவேளை பூவலரசி தூப்புக்காரி மகளாக இல்லாமல் இருந்திருந்தால் துணிச்சலாக வீட்டில் காதலைச் சொல்லியிருக்கலாம். "நான் ஒன்ன காதலிக்கலேண்ணு பொய் சொல்ல மாட்டேன். எனக்கு ஒன்ன பிடிக்கும் பூவு ஆனா இந்த சமூகத்துல வெளிப்படுத்தி ஒங்கூட வாழ முடியல" காதலுக்கு வறுமை பெரிதில்லை ஆனால் திருமணம் என்று வரும் பொழுது கௌரவம் பார்க்கிறது என்பதை இவ்வரிகள் புலப்படுத்கின்றது (Malarvathi, 2013).

காதலித்து ஏமார்ந்துப் போகிறவர்களில் பெண்ணுக்கு மட்டுமே அதிக பாதிப்பு மனதாலும் உடலாலும். "ஊசி எடம் கொடுத்தா தான் நூலு நுழையும்" என்று கூறிவிடுவார்கள். ஆண் காதலித்தாலும் சரி அவளை ஏமாற்றினாலும் சரி அதை மறந்து விட்டு வேறு திருமணம் செய்து கொள்கிறான். இந்த சமூகத்தைப் பொருத்த வரையில் காதலும் தகுதி பார்த்துதான் வர வேண்டும் என்பதைப் பூவரசியின் நிலை உணர்த்துக்கின்றது.

## முடிவுரை

தூப்புக்காரி நாவல் விளிம்பு நிலையில் இருக்கும் துப்புரவாளர்களின் வாழ்வியலை மையப்படுத்தியது. துப்புரவாளர்கள் அந்த கழிவறையைச் சுத்தம் செய்யும் காட்சியை ஆசிரியர் எழுத்தின் மூலம் கண் முன் காட்சிப்படுத்துகிறார். உடல் சுகாதாரத்தையும் இழந்து மாரியாதையும் இழந்து நிற்பவர்களுக்கு இறுதிவரை வறுமை மட்டுமே துணையாக நிற்கின்றது. மனித கழிவைச் சுத்தம் செய்பவர்களைப் பார்த்து மனிதனே ஒதுங்கிப் போகிறான். வறுமையிலும் தவறான தொழிலில் ஈடுபடாமல் உடல் உழைப்பை மட்டுமே நம்பி வேலை செய்பவர்கள் துப்புரவாளர்கள். நடந்து செல்லும் பாதை, பேருந்து நிலையம், பொதுக் கழிப்பிடம், மருத்துவமனை என அனைத்து இடத்தையும் சுத்தம் செய்பவர்கள் துப்புரவாளர்களே. உலகமே அடுத்தக் கிரகத்தில் உயிர் வாழ இடம் தேடும் அளவிற்க்கு அறிவியலில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. துப்புரவுத் தொழிலுக்கென்று ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆசிரியரின் ஆசையை இந்நாவலில் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது.

## References

Bhakthavatsala Bharathi, (2019) Panpattu Manudaviyal, Meiyappan Pathippagam, Chennai, India.

Malarvathi, (2013) Thuppukkari, Mathi Veliyedu, Chennai, India.

Parimelazhagar, (2015) Thirukkural Urai, Arunapathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License